**பத்தாம் வகுப்பு – தமிழ்**

**நேரம் – 1.30 மணி** **தேர்வு - 2 (இயல் 3,4 )** **மதிப்பெண்கள் 50**

**பகுதி – I (மதிப்பெண்கள் 8)**

**i) அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்க.** **7×1=7**

**ii) குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதுக.**

1. 'விருந்தினரைப் பேணுவதற்குப் பொருள் தேவைப்பட்டதால், தன் கருங்கோட்டுச் சீறியாழைப் பணையம் வைத்து விருந்தளித்தான்' என்கிறது புறநானூறு --- இச்செய்தி உணர்த்தும் விருந்து போற்றிய நிலை-------.

   அ) நிலத்திற்கேற்ற விருந்து ஆ) இன்மையிலும் விருந்து

   இ) அல்லிலும் விருந்து ஈ) உற்றாரின் விருந்து.

2. 'சிலம்பு அடைந்திருந்த பாக்கம் எய்தி' என்னும் அடியில் பாக்கம் என்பது -------.

   அ) புத்தூர் ஆ) மூதூர் இ) பேரூர் ஈ) சிற்றூர்

3. அறிஞருக்கு நூல் , அறிஞரது நூல் ஆகிய சொற்றொடர்களில் பொருளை வேறுபடுத்தக் காரணமாக அமைவது -------.

   அ) வேற்றுமை உருபு ஆ) எழுவாய் இ) உவம உருபு ஈ) உரிச்சொல்

4. பாரத ஸ்டேட் வங்கியின் உரையாடு மென்பொருள் எது?

   அ) துலா ஆ)சீலா இ) குலா ஈ) இலா

5. குலசேகர ஆழ்வார் 'வித்துவக் கோட்டம்மா' என்று ஆண் தெய்வத்தை அழைத்துப் பாடுகிறார். பூனையார் பால்சோற்றைக் கண்டதும் வருகிறார். இத்தொடர்களில் இடம்பெற்றுள்ள வழுவமைதி முறையே --------.

   அ) மரபு வழுவமைதி, திணை வழுவமைதி ஆ) இட வழுவமைதி, மரபு வழுவமைதி

   இ) பால் வழுவமைதி, திணை வழுவமைதி ஈ) கால வழுவமைதி, இட வழுவமைதி

**பாடலைப் படித்துப் பின்வரும் வினாக்களுக்கு விடை தருக.**

பொருந்து மற்றுஅவன் தன்அருகுற இருத்தல்
போமெனில் பின் செல்வதாதல்
பரிந்துநன் முகமன் வழங்கல் இவ்வொன்பான்
ஒழுக்கமும் வழிபடும் பண்பே.

6. வழங்கல் – இலக்கணக்குறிப்பு தருக.

   அ) வினைமுற்று ஆ) வினையெச்சம் இ) பெயரெச்சம் ஈ) தொழிற்பெயர்

7. அருகுற – பொருள் தருக.

   அ) அருகில் ஆ) தொலைவில் இ) அரிதாக ஈ) எளிதாக

**பகுதி – II (மதிப்பெண்கள் 8)** **பிரிவு -1**

**எவையெனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் குறுகிய விடையளிக்க.** **2×2=4**

8. விடைக்கேற்ற வினாவினை அமைக்க.

   அ. இல்லறம் புரிவது விருந்தோம்பல் செய்யும் பொருட்டே என்கிறார் திருவள்ளுவர்.

   ஆ. தனித்து உண்ணாமை என்பது தமிழரின் விருந்தோம்பல் பண்பின் அடிப்படை.

9. மாஅல் பொருளும் இலக்கணக் குறிப்பும் தருக.

10. 'பண்என்னாம்' எனத்தொடங்கும் திருக்குறளைப் பிழையின்றி எழுதுக.

**பிரிவு -2**

**எவையெனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் விடையளிக்க வெண்டும்.** 2×2=4

11. பாரதியார் கவிஞர், நூலகம் சென்றார், அவர் யார்? ஆகிய தொடர்களில் எழுவாயுடன் தொடரும் பயனிலைகள் யாவை?

12. இரு சொற்களையும் ஒரே தொடரில் அமைத்து எழுதுக.

அ) தொடு, தோடு ஆ) மலை, மாலை

13. பழமொழிகளை நிறைவு செய்க.

அ) விருந்தும் ------------------------. ஆ) அளவுக்கு ---------------------------.

**பகுதி – III (மதிப்பெண்கள் 9)** **பிரிவு - 1**

**எவையெனும் ஒரு வினாவிற்கு மட்டும் சுருக்கமாக விடையளிக்க.** 1×3=3

14. இன்றைய அறிவியல் கண்டுபிடிப்புகள் மனிதனை மேம்படுத்துகின்றனவா என்பது குறித்த சிந்தனைகளை முன்வைத்து எழுதுக.

15. கீழ்க்காணும் உரையினைப் படித்து கொடுக்கப்பட்டுள்ள வினாக்களுக்கு விடையளிக்க.

தம் வீட்டிற்கு வரும் விருந்தினரை முகமலர்ச்சியோடு வரவேற்று உண்ண உணவும் இருக்க இடமும் கொடுத்து அன்பு பாராட்டுவதே விருந்தோம்பல். விருந்தினர் என்றால் உறவினர் என்று இக்காலத்தில் கருதுகின்றனர். உறவினர் வேறு, விருந்தினர் வேறு. முன்பின் அறியாத புதியவர்களுக்கே விருந்தினர் என்று பெயர். அதனால்தான் 'விருந்தே புதுமை' என்று தொல்காப்பியர் அன்றே கூறியுள்ளார்.

அ. விருந்தினர் என்போர் யாவர்?

ஆ. விருந்து குறித்து தொல்காப்பியர் கூறியது யாது?

இ. இவ்வுரைப்பத்திக்குப் பொருத்தமான தலைப்பு ஒன்று தருக.

**பிரிவு - 2**

**எவையெனும் ஒரு வினாவிற்கு மட்டும் சுருக்கமாக விடையளிக்க.** 1×3=3

16. "வாளால்" எனத்தொடங்கும் பெருமாள்திருமொழிப் பாடலைப் பிழையின்றி எழுதுக.

17. "மாளாத காதல் நோயாளன் போல்" என்னும் தொடரிலுள்ள உவமை சுட்டும் செய்தியை விளக்குக.

**பிரிவு - 3**

**எவையெனும் ஒரு வினாவிற்கு மட்டும் சுருக்கமாக விடையளிக்க.** 1×3=3

18. "வேலொடு நின்றான் இடுவென்றது போலும்
கோலொடு நின்றான் இரவு" – இக்குறளில் வரும் அணியினைச் சுட்டி விளக்கம் தருக.

19. நேற்றிரவு பெய்த மழை எல்லாம் தொட்டியை நிறைத்திருந்தது. வாழைத் தோப்பில் குட்டியுடன் நின்றிருந்த மாடு கத்தியது; தந்தை என்னிடம், "இலச்சுமி கூப்பிடுகிறாள், போய்ப் பார்" என்றார். "இதோ சென்று விட்டேன்" என்றவாறே அங்குச் சென்றேன். துள்ளிய குட்டியைத் தடவிக் கொடுத்து, "என்னடா விளையாட வேண்டுமா?" என்று கேட்டு அவனை அவிழ்த்து விட்டேன். என் தங்கை அங்கே வந்தாள். அவளிடம், "நீயும் இவனும் விளையாடுங்கள்" என்று கூறினேன். அவிழ்த்து விடப்பட்ட இலச்சுமித் தொட்டியிலிருந்த நீரைக் குடித்தாள். – இப்பத்தியிலுள்ள வழுவமைதிகளைப் பட்டியலிட்டு எழுதுக.

**பகுதி – IV (மதிப்பெண்கள் (10)**

**அனைத்தது வினாக்களுக்கும் மட்டும் விடையளிக்க.** 2×5=10

20. அ) உங்கள் இல்லத்துக்கு வந்த உறவினருக்கு நீங்கள் செய்த விருந்தோம்பலை எழுதுக. (அல்லது)

ஆ) உணவு விடுதியொன்றில் வழங்கப்பட்ட உணவு தரமற்றதாகவும் , விலை கூடுதலாகவும் இருந்தது குறித்து உரிய சான்றுகளுடன் உணவுப் பாதுகாப்பு ஆணையருக்குக் கடிதம் எழுதுக.

21. அ) **மொழிபெயர்க்க.**

Malar: Devi, switch off the lights when you leave the room.

Devi: Yeah. We have to save electricity.

Malar : Our nation spends a lot of electricity for lighting up our streets in the night.

Devi: Who knows? In future our country may launch artificial moons to light our night time sky!

Malar: I have read some other countries are going to launch these types of illumination satellites near future.

Devi: Superb news! If we launch artificial moons, they can assist in disaster relief by beaming light on areas that lost power! (அல்லது)

ஆ) **காட்சியைக் கண்டு கவினுற எழுதுக.**



**பகுதி - V (மதிப்பெண்கள் 16)**

**அனைத்தது வினாக்களுக்கும் மட்டும் விடையளிக்க.** 2×8=16

22. அ) ஆற்றுப்படுத்தல் என்பது அன்றைக்குப் புலவர்களையும் கலைஞர்களையும் வள்ளல்களை நோக்கி நெறிபடுத்துவதாக இருந்தது. அது இன்றைய நிலையில் ஒரு வழிகாட்டுதலாக மாறியிருப்பதை விளக்குக. (அல்லது)

ஆ) ஒரு குழந்தையைத் தூக்கவும் கீழே விழுந்த ஒரு தேனீர்க் கோப்பையை எடுக்கவும் மென்பொருள்அக்கறைகொள்ளுமா? வெறும் வணிகத்துடன் நின்றுவிடுமா? இக்கருத்துகளை ஒட்டிச் 'செயற்கைநுண்ணறிவின் எதிர்கால வெளிப்பாடுகள்' பற்றி ஒரு கட்டுரை எழுதுக.

23. அ) கீழே கொடுக்கப்பட்டுள்ள குறிப்புகளைக் கொண்டு "விண்வெளியும் கல்பனா சாவ்லாவும்" என்னும் தலைப்பில் கட்டுரை எழுதுக.

குறிப்புகள் : முன்னுரை - பிறப்பும் கல்வியும் - முதல் விண்வெளிப்பயணம் - கொலம்பியா விண்கல நிகழ்வு – முடிவுரை.

ஆ) அன்னமய்யா என்னும் பெயருக்கும் அவரின் செயலுக்கும் உள்ள பொருத்தப்பாட்டினைக் கோபல்லபுரத்து மக்கள் கதையின் வாயிலாக விளக்குக.

www.Padasalai.Net